உ

குமரநாதன் துணை.

புதிய பிளேட் நவீன கீதங்கள்

மிஸ் K. B. சுந்தராம்பாள், மாஸ்டர் S. G. கிட்டப்பா, கபிலவாய் ராமநாத சாஸ்திரி, S. V. சுப்பையா பாகவதர், மதுரை, M. M. தண்டபாணிதேசிகர் ஆகிய நவராஜ சங்கீத வித்வ சிகாமணிகள் பாடிவரும்

இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால் நேரு ஆனந்த கிராமபோன் சங்கீதம்

3-ம் பாகம்.



மதுரை புதுமண்டபம், புத்தக வியாபாரம்

**V. கருப்பணபிள்ளையவர்களால்**

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1931. [விலை அணா 2.

# புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| K. B. சுந்தராம்பாள் பாடிய புதிய பிளேட் பண்டித மோதிலால் நேரு ஆனந்த கிராமபோன் சங்கீதம் 1, 2, 3, 4 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷை 4 பாகமும் ஒரே கட்டடம் | 0 | 6 | 0 |
| S. V. சுப்பையா பாகவதர் பாடிவருகிற பூங்கா விநோத சிங்காரப் பாட்டுகள் 1, 2 பாகம், பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரை பபூன் N. S. ஷண்முகம் பாடிவரும் புதிய பிளேட் ஒரிஜினல் புதிய பபூன் பாட்டு 1, 2, 3 பாகங்கள் பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| மதுரை V. நடராஜ பிள்ளை அவர்கள் இயற்றிய மதுரைவீரசுவாமி வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய தேசீயகீதம் | 0 | 2 | 0 |
| ஷையார் இயற்றிய வேதாரண்யம் உப்புச் சத்யாக்கிரக கீதமென்னும் காங்கிரஸ் பாட்டு | 0 | 2 | 0 |
| கவிக்குஞ்சரம் அவர்கள் இயற்றிய நாட்டுத்திலகமென்னும் ராட்டுப் பாட்டு | 0 | 5 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்களும், இன்னும் இதர புஸ்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு சவுகரியமாயும் கீழ்கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்:—

**V. கருப்பண பிள்ளை,**

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

உ

குமாரநாதன் துணை.

இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால் நேரு

## ஆனந்த

# கிராமபோன் சங்கீதம்.

வெண்பா.

தேசபக்தர் போற்றுந் திருவுடைய மோதிலால்மேல்
நேசமுற்ற கீதம் நிகழ்த்துதற்கு—வாசமுற்ற
பாரதத்தாய் பொன்னடியைப் பண்புடனே தோத்தரித்தேன்
சீரருளைத் தந்திடவே தேர்ந்து.

மதுரை

மதுரகவி, V. நடராஜ பிள்ளையவர்கள் பாடியது.

காந்தி ஜயந்திக் கொண்டாட்டம்.

காமி சத்யபாமா என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

காந்தி ஜன்ம நாளைக் கருத்திற் போற்றுவோம்
கருத்திற் போற்றுவோம்
போற்றுவோம்
போற்றுவோம் மகாத்மா (கா)

அநுபல்லவி.

சாந்த சொரூப மூர்த்தி ஜன்ம வருடப் பூர்த்தி
பாந்தமுடன் கொண் டாடுவோம்
ஆடுவோம்
ஆடுவோம் மகாத்மா (கா)

இந்தியா மக்க ளெல்லாம் ஏற்ற கதருடுத்தி
வந்தே மாதரங் கோஷிப்போம்
கோஷிப்போம்
கோஷிப்போம் மகாத்மா (கா)

பேணுஞ் சுயராஜ் ஜியம் பெற்றிட லண்டன் சென்ற
தீன பந்துவை வாழ்த்துவோம்
வாழ்த்துவோம்
வாழ்த்துவோம் மகாத்மா (கா)

வாச மிகு மதுரை வளர் திரு நடராஜன்
தேசிய கீதம் பாடுவோம்
பாடுவோம்
பாடுவோம் மகாத்மா (கா)

---

## மிஸ். K. B. சுந்தராம்பாள் பாடிய
## புதிய பிளேட் பாட்டு.

பல்லவி.

தாயிடத்தில் அன்பிலாத ஜன்மமும் வீணே
பெற்ற (தா) உற்ற (தா) பத்துமாதஞ் சுமந்து பெற்ற (தா)

அநுபல்லவி.

தாய்நாட்டி லன்பில்லார்க்கு தர்மமேது கர்மமேது
பேயாய்த் திரிபவர்க்குப் பெயரேது — சொந்தத் (தா)

மானிலத்து மக்களெல்லாம் மகிழ்வுடனே யொன்றுகூடி
தானே யறிந்து தாயைப் போற்றுவீரே — அருமைத் (தா)

ஒற்றுமை யில்லாத நீங்கள் உலகத்தை யாளுவீரோ
கற்று மறியாதமூடக் கசடர்களே — பெருமைத் (தா)

தலைவர் வசனங் கேட்டு சாந்தமுட னவர்க்குட்பட்டு
கலவரங்கள் செய்வதேனோ காரியம் விட்டு — நல்ல (தா)

ஜாதி மதத்தாலே சண்டை தானேயிடும் பேதையரே
ஜாதியேது மதங்களேது சாற்றுவீரே — பெற்ற (தா)

சாந்தி பெறவே தொண்டு சர்க்காரை நீர்கைக்கொண்டு
காந்தியடிகள் உபதேசத்தின் மெய்மை கண்டு—உற்ற (தா)

---

## மாஸ்டர், S. G. கிட்டப்பா, புதிய பிளேட் பாட்டு.

இராகம்-கமாஸ் — தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாமத மேன் தாளை நீ திறவாய்
ததி யிது தயவாய் (தா)

அநுபல்லவி.

கோமள மயிலினமே கொஞ்சிடும் மடவனமே
கூறுவாய் சினமேன் கூறுவாய் சினமேன்
குணவதி யெனையகல விடுவாயினிமேல் (தா)

சரணம்.

கோ தையழகி யதிவிநய
கோ ல மதிசய மதிபுகழ்
கோ மகளொடு குலவிட
கோ தை யுந்தனை யகலவிடல
கோ மொழிபு கோ விடல
கொஞ்சும் மொழியுடைய அஞ்சுகமே (தா)

---

சங்கீதச் சண்டமாருதம்

## S. G. கிட்டப்பா புதிய பிளேட்

ஸ்ரீராமர்— பல்லவி.

தசரத ராஜகு மாரா அலங் காரா
சுகு மாரா அதி தீரா (தச)

அநுபல்லவி.

இசை பெருகிய ரகு வம்ஸ சிலாக்யம்
எழில்பிதுர் வாக்யபரி பாலன யோக்யம்
வசைதவிர் வதனுல் வரும் பெரும் பாக்யம்
மனதினி லுணர் தம்பி பரதா சுக புனிதா
சத்ய விரதா அதி விரதா (தச)

பரதன்— பல்லவி யெடுப்பு.

கௌசலை மகிழும் விநோதா குண நீதா
ரகு நாதா என்மேல் வாதா (கௌ)

அநுபல்லவி.

தாய் செய்த வினையினால் தமையன் நொந்தேனே
தரணியி லிகழையுந் தானடைந் தேனே
நேயமுடனே யும தடி பணிந்தேனே
நிச்சய மிதுததி வரும் துயர் தீரும்
அருள் தாரும் எனக் காரும் (கௌ)

ஸ்ரீராமர்— சரணம்.

வருடமீ ரேழு வனத்தினிற் கழித்தே
வருவே னயோத்திமா வளர்நக ரடுத்தே
அருமை பெருமை யுன தன்பினை நினைத்தே
அதி துரிதமுடனே வருவேன் அருள் புரிவேன்
ஆசி தருவேன் தவறிடேனே (தச)

உமதருந் தரிசனம் என்று காண்பேனோ
உத்தமா வுமைப் பிரிந் துயிர்தரிப் பேனோ
அமையும் அயோத்திமா நகரடை வேனோ
ஐயோ சகியே னென தண்ணா அருட் கண்ணா
மணி வண்ணா யென தண்ணா (கௌ)

ஷியார் புதிய பிளேட்

## வேடனான சுப்ரமண்யர் மானைப்பற்றி வள்ளிமானிடம் கேட்குதல்

கலித்துறை.

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே
மேயாத மான் புள்ளி மேவாத மான் நல்விழி மான்
சாயாதகொம்புஇரண்டிருந்தாலும் எனைத்தலை நிமிர்ந்து
பாயாத மான் வந்ததுண்டோ உந்தன் பார்வையிலே

## சங்கீத ராணி மிஸ். K. B சுந்தராம்பாள்

புதிய பிளேட்.

மானைத் தேடிவந்த வேலவருக்கு வள்ளி பதிலுரைத்தல்.

விருத்தம்.

இராகம்-சங்கராபரணம்—விருத்தம்.

எந்த மானிட வேடர் நீர் காண் வேட்டைக்
கேற்ற மான் மலையிலுண்டு இம் மான் நம்பி
தந்த மான் உமது வலைக்கு அகப்படா மான்
சவுரிய மான் தைரிய மான் ஜாதி மான் நான்
அந்த மான் மகனனங்கன் தனக் காற்றுமல் [மிட்டாய்
ஆண் பிள்ளை யொரு பெண் பிள்ளையிடம் வந்து அபய
சொந்த அம்மான் மகன் போலே தேதோ சொல்லுகிறீர்
தோழியை விட்டினியடித்துத் துரத்துவேனே.

---

சங்கீத சுரசாகித்ய

## S. V. சுப்பையா பாகவதர் அவர்கள் புதியபிளேட்

காக்ஷி கண் காக்ஷியே என்ற மெட்டு.

பல்லவி.

பூங்கா வினோதமே புகலவொண் ணுப்பிர மாதமே (பூ)

மகுடங்கள்.

புத்திக்கும் எத்திக்கும் வினையமிது
சித்திக்கும் நத்திக்கும் அதி சுக (பூ)

பொங்கும் எங்கும் பரிமளம்
மெங்கும் துங்கம் அதிசுக (பூ)

பொன்னுலகம் தன்னிலுறை அமரரும்
இன்னிலம் வாழ் மன்னர்களும் தினம்புகழ் (பூ)

பூரிக்குமே விப காரிக்குமே நவ
சாரிக்குமே சுகம் பாரிக்குமே யின்ப (பூ)

புனிதப் படுமலர் இனிதுக் கிடமுயர்
முனிதற் கருதவம் கனிதர்க்கதி நவ (பூ)

காதலித்தினி மே சுகித்திட
மே மிகுத்திடு வாசை வைத்திடு (பூ)

அநுபல்லவி.

பாங்கான சோலைகாக்ஷி
பற்பல வற்புத கற்பக நீதமே (பூ)

சரணம்.

நீங்கா திரவு பகல் நின்று குளிர்ந்திடு
தென்றலும் வீச
நிபுணப்பிர சங்கியைப்போல் நெஞ்சுரு மிஞ்சிய
கிஞ்சுகம் பேச
தீங்குயில் பாட மயிலாட நல்சித்தன நர்த்தன
மெத்த வுல்லாசம் தேர்ந்த மாங்கொத்திகள் (பூ)

## பெஜவாடா

## கபிலவாய், ராமநாத சாஸ்திரியவர்கள்

### புதிய பிளேட்

இராகம்—அசாவேரி-திரிதாளம்.

பல்லவி.

ஏதி கெதி நாகு ரங்க ரங்கா
ரங்க ரங்கா ரங்க ஸ்ரீரங்கா (ஏதி)

அநுபல்லவி.

கருணு பாணு காவா தேவா
ரங்கா ரங்கா ரங்க ஸ்ரீரங்கா (ஏதி)

சரணம்.

தல்லிவி தண்ட்றிவி
தெய்வமு ஸாடகான
தயநிதே தாரிலேக
நீதாரினி சேரன்
தாமஸமுலேக ஸ்ரீமனோநாதா
ஏதிகெதி நாகு ரங்கா ஸ்ரீரங்கா (ஏதி)

---

### ஷையார் புதிய பிளேட்

இராகம்-கல்யாணி—தாளம்-ஆதி.

பத்யம்.

பதிகெம்தப்ரீதி நாயை னுன்னனே
மாயேநவாயம்ப்யு பாலிம்பசாயுடம்மா

நிலேமுக தெல்லக நேயிநீ வெம்த
யொங்கினபடி நம்மு வாருண்ட வலடம்ம
பின்ன நாடசு கொலெ நன்னெரிங்கின்
வாகு பண்டிதுலி யாரனுண்டாரம்மா
இந்த யாகுட நீகே ஹிதமம்சு கான நீ
வொமிம்பு மாடனே வெரவனம்மா
பூசிவசி யிம்த்து நா மனசைன கனுமு
கொடியாதலுவபடின நாஞேடி ஸம்ட்ட
செலிகி யீகலிஸம்புவ சிமட்ட புசுமமு
ப்ரிதினயடகுதினி யீதெனீபாதமென (பதி)

---

## ஷியார் புதிய பிளேட்

இராகம்-பிம்ப்ளைஸ்—தாளம்-ஆதி.

பல்லவி.

கோரி பஜிம்துணு கோவிந்துன் மதிஞரா
மதிஞரா மனசு முகுந்தன் (கோ)

அநுபல்லவி.

நீரஜநேத்ருனு ஸாரஸ நாபுனி
வாரஸி கண்யா கானந்துன்
மானஸ முனந்து மானனி பக்தி
வரத நாதிஹரண க்யாஸுன திஞதிஹா
ரணவிகாஸுன் கருணனந்த
மநேவிகாஸுன் (கோ)

---

### ஷியார் புதிய பிளேட்

இராகம்-பிலஹரி—தாளம்-பந்த்யம்.

பல்லவி.

ஸ்திரீமைன நடவடி ஜனலுகந்தரிசினி
வலயுனே ராஜ்ய பால்யமு (ஸ்தி)

அநுபல்லவி.

நனுதண்ட்ரி மானிடரா நம்பலேகுலு
பரிஹாஸிம்படே ராமுவண்டி கொடுகு (ஸ்தி)

சரணம்.

பரதஸெளமி துலவண்டி கம்மலு
ஸீதயண்டி பார்யனு வசுநயம்து
லேசம் சுமுந்து யுகம்பல புருஷீலு
தனூபவலெதெ யிரீதிவாரு
நடுசுகொன வலேதெ கஷ்ட சுகமுலு
மனகு சாஸ்வத முலேபது
நாலு கெடுலு தாட்திரிசிராதெ
தரஸ¬பாலிம்பனே காணி சந்தவாகு
தயனீவு பாலிம்ப வலெதெதன்றி (ஸ்தி)

---

### ஷியார் புதிய பிளேட்

இராகம்-மாண்டு—தாளம்-ரூபகம்.

பல்லவி.

பிராஜால்கலடா ஸத்தியாபதீ
பிராஜாலகலடா நாயானதீ (பிர)

அநுபல்லவி.

விரதா விதரணமுன குணஸத்தியாபதீ
நடனஸூத்திரதாரி முராரி
எடுலதாடகலடா நாயானதீ
ஸாவிதான முலகுண (மிர)

சரணம்.

ஸீதா பிராணய ஜலத்தின்னவதர்பிகீ
மிரதாவுகலந்த நாககோரீக
வாத லாட கலடா (மிர)

மதுர மதுர முரலீ காவ
ரஸாஸ்வரதனமுன் அதாஸூதாரஸ
மதினே குரோலி வா. (மிர)

---

சங்கீதபூஷணம்.

## மதுரை M. M. தண்டபாணிதேசிகர் புதியபிளேட்

இராகம்-மனோலயம்—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

துக்கமிலாதுல கத்தினிலே யென்னை
வைத்திடில் நான் வாழ்வேன்
அஃதில்லையாகி லுனக்கடியேனெனும்
முத்திய தே தாராய் (துக்)

பக்குவமானவர் கட்கருள்வாயெனில்
இச்சிறு நான் யேனோ

இக்கணமேயென் ம னக்குறை தீர்சுக
நர்த்தன னே நாதா (துக்)

மாதர் மயக்கம தேகொளு மேழையென்
வாதை தவிர்த் தருளே
வேதன் முதற் சுர லோகருமே புகழ்
மாதவ நற் பொருளே (துக்)

தீத கலக்குற மாதவள் சேர் குக
நாதசுகத் தருவே
ஓதமிகத்துணை யே முருகா யெனை
ஆதரி சற் குருவே. (துக்)

---

சங்கீத பூஷணம்

## M. M. மதுரை தண்டபாணிதேசிகர் புதியபிளேட்

### வள்ளிமலைத் திருப்புகழ்.

அல்லி விழியாலும் முல்லை நகையாலும்
அல்லல் படவாசைக் கடலீயும்
அள்ள வினிதான நள்ளிரவு போலும்
உள்ள வினையார தனமாரும்
இல்லு மிளையாரு மொல்ல அயலாக
வல்லெருமை மாயச் சமனாரும்
எள்ளி யெனதாவி கொள்ளை கொளுநாளில்
உய்யவொரு நீ பொற் கழல் தாராய்
தொல்லைமறை தேடி யில்லையெனு நாதர்
சொல்லு முபதேசக் குருநாதா

துள்ளி விளையாடு புள்ளி யுழைமேவு
வெள்ளி வனமீது உறைவோனே
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லை வடிவேலைத் தொடுவோனே
வள்ளி படர்சாரல் வள்ளிமலை மேவு
வள்ளி மணவாளப் பெருமாளே.

---

## கோயம்புத்தூர், A. S. ராஜப்பா புதிய பிளேட்

இராகம்—சங்கராபரணம்-ரூபகம்.

பல்லவி.

கதிர்வேலுக் கெதிர் வேலு மில்லையென
கட்டு வேலுக்கே தனமே—கலி
•கால சகல உலகாளும் ராஜ வடி
வேலனுரைக்கும் வ சனமே (கதி)

அநுபல்லவி.

கருணை யருணகிரி புகழ்வேல்—திரு
கலபமயிலிலகு மன்வேல்—அது
தேசு நிறைந்தொளிர் மின்வேல்—ஒரு
தீதிலாத குற மாது வள்ளியொடு
பேசு மந்த்ர நன்வேல் வேல் வேல் (கதி)

ரத்ன வடிவேல்
சித்ர வடிவேல்
மயூர வடிவேல்
முத்து வடிவேல்—தீர
சத்ரு சங்கார நித்ய சுப திவ்ய
மங்கள வேல் வேல் வேல் (கதி)

சரணம்.

சமாஸ சங்கரதாஸ்
சாப முத்துசாமி தொண்டு புரிவேல்

வீராசாமி சந்தானக்ருஷ்ண
சுப்பராயாதிகளும் பணிவேல்
சங்கரலிங்கமும் பணிவேல்—தமிழ்ச்
சிங்கவேல்ச்சாமி யணிவேல்—இசை
தங்கும் பாஸ்கரன் நினைவேல்—
சங்கதி யெங்கு மலங்கிர்த ரங்க
ராஜன் மாதன வேல் வேல் வேல் (கதி)

ஷையார் புதிய பிளேட்

பல்லவி.

கந்தா காருண்யனே கனசேவலனே (கந்)

அநுபல்லவி.

செந்தூரார் புண்யனே கொடிக்காவலனே (கந்)

கஜல்

ஆதியோட ளாதியான அய்யனே முருகையனே

பாட்டு.

பொன்னே பூம்பதமே உன்னைப் போற்றினனே
என்மே லென்கதமோ பணிந்தேற்றினனே (கந்)

தொகையரா.

காக்ஷியோத கடாக்ஷி மாக்ஷி கொள்
கந்தனே சிவ மைந்தனே
சாக்ஷி யோதுமீ ளைக்ஷியாள் தரு
சந்தனே பிர பந்தனே

பாட்டு.

தந்தாளாய் சரணம் இன்னுந் தாமதமா
பண்கேளாய் தருணம் பண்டிதக் குமரா (கந்)

---

இதன் தொடர்ச்சி 4-பாகம் அவசியம் வாங்கிப் பார்க்கவும்.